# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

## அசல் வழக்கு எண் 105/2019

பெயர்: ராஜம்மாள் நாள் : 10.10.2022

வா.த.சா.1 – 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

வா.த.சா.1 – ராஜம்மாள் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

எனது கணவர் பெயர் மணி என்றால், சரிதான். நான் என் அம்மாவுடன் குடியிருந்து வருகிறேன். என்னுடன் பிறந்தவர் ஒருவர் உள்ளார், அவர் பெயர் பாலு ஆகும். அவருடன் எனக்கு நல்ல உறவுமுறைதான் உள்ளது. அவருக்கு ஒரு மகன் உள்ளார். அவர் மீன் பிடிக்கும் தொழில் செய்து வருகிறார். 1, 3 பிரதிவாதிகள் எனக்கு சகோதரர்கள் முறை என்று சொன்னால், சரிதான். 2 பிரதிவாதிக்கு நான் அத்தை உறவு முறை என்று சொன்னால், சரிதான். பிரதிவாதிகள் என்னுடைய நெருங்கி உறவினர்கள் என்று சொன்னால், சரிதான். பிரதிவாதிகள் என்னை சாட்சியம் கையொப்பம் செய்ய அழைத்து சென்று என்னுடைய சொத்தை அபகரித்துக் கொண்டார்கள், அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். சாட்சி கையொப்பம் செய்ய அழைத்து சென்று நிலத்தை அபகரித்தார்கள் என்ற விபரத்தினை வழக்குரை மற்றும் முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ளேனா என்றால், கூறியுள்ளேன். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையின் விபரங்கள் தெரிந்து கொண்டேனா என்றால், என்ன பதில் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் எனக்கு சொந்தமான காட்டில் தடம் அமைத்து என்னை அடிக்க வந்தார்கள். மேற்படி விபரத்தை இந்த வழக்கில் கூறியுள்ளேனா என்றால், கூறியுள்ளேன். பிரதிவாதிகள் அடிக்க வந்தார்கள் என்பதற்காக புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால், இல்லை. பிரதிவாதிகள் உண்மையில் அடிக்க வந்திருந்தால், நான் காவல் நிலையத்தில் புகார் அளித்திருப்பேன் என்றாலும், அவ்வாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்பதால்தான் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. என்னை பிரதிவாதிகள் எடப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றார்கள். கடத்தி சென்றார்களா என்றால், இல்லை. வா என்று அழைத்து சென்றார்கள். நான் எடப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் 4, 5 பக்கத்தில் கை ரேகை வைத்தேன். சார்பதிவாளர் அலுவலகத்தில் கையொப்பம் செய்யும்பொழுது எதற்காக கையொப்பம்

வாங்குகிறோம் என்ற விபரத்தினை எடுத்து கூறிதான் கையொப்பம் பெறுவார்கள் என்றாலும், அவ்வாறு நான் விபரத்தினை தெரிந்து கொண்டுதான் கை ரேகை வைத்தேன் என்று சொன்னால், சரியல்ல. நான் தன்னிச்சையாக ஒப்பந்த பத்திரத்தை எழுதி கொடுத்துவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. ஏற்கனவே காலம் காலமாக சென்று வந்த தடத்தினைதான் பத்திரமாக எழுதி கொண்டார் என்று சொன்னால், சரியல்ல. பிரதிவாதிகளுக்கு உண்மையில் வேறு தடம் இருந்திருந்தால், எதிர் வழக்குரைக்கு பதிலுரை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு வேறு தடம் இல்லையென்பதால்தான் நான் பதிலுரை தாக்கல் செய்யவில்லை என்றாலும், சரியல்ல.

வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வா.த.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம் /ராஜம்மாள்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.